1990 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டி, இங்கே மட்டுமல்ல, இன்னும் அருகில் இருக்கக்கூடிய முனைஞ்சிப்பட்டி பக்கத்திலேகூட இப்படிப்பட்ட பறவைகள் அதிகமாக வந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்தப் பகுதியிலே ஒரு பறவைகள் சரணாலயம் அமைக்க நாம் வழிமுறைகளைக் காணலாம்.

துரைப்பாக்கம் கிராமம் ஒக்கியத்தில் அணை கட்டுதல்.

*923—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கியத்தில் ஒரு அணை கட்டி விவசாயத்தையும், குடிநீரையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கியத்தில் ஒரு அணைகட்டி விவசாயத்தையும் குடிநீரையும் பாதுகாக்க அரசு ஒரு திட்டத்தை 26.60 இலட்சத்தில் தயாரித்திருக்கிறது. அந்த அறிக்கை ஆய்வில் இருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒக்கியத்திற்கு வருகிற தண்ணீர் தாம்பரத்திலிருந்து சற்றொப்ப 15 கிலோ மீட்டர் தூரத்திலே வருகின்ற நீர் அனைத்தும் சேர்ந்து செல்கிற பகுதி. இங்கே வந்து தேங்குகிற தண்ணீர் கடல் நீரோடு கலந்து விடுகிற காரணத்தால் 3, 4 கிராமங்களில் குடிநீரும், விவசாய நீரும் உவர் நீராக மாறி விடுகின்ற காரணத்தால் அரசு இதை விரைந்து செயல்படுத்துமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத்தான் அரசு இந்த அணையைக் கட்டினால் விவசாயத்திற்குப் பயன்படுமா, அதற்கு மண் வளம் தக்கதாக இருக்கிறதா என்று விவசாய இலாக்காவிடத்திலே ஒபினியன் கேட்டிருக்கிறது. எனவே, விவசாய இலாக்காவிடமிருந்தும் நமக்கு அறிக்கை வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படி மண்வளம் தக்கதாக இருக்கிறது என்று சொன்னால் சுமார் 306 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அளிக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டம் அமையும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இதற்கு திட்டம் தீட்டப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு, பொதுப் பணித் துறைக்குச் சென்று, ஒப்பந்தம் விடுகிற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் இது தடுத்து நிறுத்தப்பட்டது. எனவே, இதை மீண்டும் அதிகாரிகளை வைத்து அந்த ஒப்பந்தத்தை சீர் செய்வதற்கு, இது போன்று தாமதம் ஏற்படாமல் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் தீட்டிய எத்தனையோ திட்டங்களை இடையில் விட்டு விட்டார்கள். அப்படி விட்டு விட்ட திட்டங்களை மீண்டும் கண்டெடுத்து, நடைமுறைப்படுத்துவதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது.

சிறுபத்தூர் ஏரிக்குத் தண்ணீர்

*3318—திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தொழிற்பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள்

*4183—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை புதூரில் உள்ள தொழிற் பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விற்கப்பட்டது ?

(இ) எந்த அடிப்படையில் விற்கப்பட்டது ?